சுருக்கம்

சிறுபான்மையினர் நலன் – முஸ்லிம் மகளிர் உதவும் சங்கங்கள் – 17 மாவட்ட முஸ்லிம் மகளிர் உதவும் சங்கங்களால் 2021–2022–ஆம் ஆண்டின் முதல் பருவத்தில் (01.04.2021 முதல் 30.09.2021 வரை) திரட்டிய நிதி ஆதாரத்திற்கேற்ப அரசின் மானியத் தொகையினை 1:2 என்ற விகிதாச்சாரத்தின் அடிப்படையில் ஒப்பளிப்பு செய்து – ஆணைகள் – வெளியிடப்படுகிறது.

---

**பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல (ட்டி1)த் துறை**

அரசாணை (ப) எண். 23

நாள் 30.03.2022,
பிலவ – பங்குனி 16,
திருவள்ளுவர் ஆண்டு 2053

படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண்.109, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல (ட்டி1)த் துறை, நாள் 08.10.2012.
2. அரசு கடித (நிலை) எண்.38, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல (ட்டி1)த் துறை, நாள் 09.05.2016.
3. அரசாணை (டி) எண்.33, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல (ட்டி1)த் துறை, நாள் 26.03.2021.
4. சிறுபான்மையினர் நலத் துறை இயக்குநரின் கடித ந.க. எண். அ4/2754/2021, நாள் 12.01.2022.
5. அரசாணை (ப) எண்.17, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல (ட்டி1)த் துறை, நாள் 28.03.2022.

......

**ஆணை:**

மேலே, நான்காவதாக படிக்கப்பட்ட கடிதத்தில், சிறுபான்மையினர் நல இயக்குநர், தமிழ்நாட்டில் சிறுபான்மையின சமுதாயத்தைச் சார்ந்த பின் தங்கிய நிலையிலுள்ள முஸ்லிம் மகளிருக்கு உதவும் வகையில் ஒவ்வொரு

மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சியரின் தலைமையில் முஸ்லிம் மகளிர் உதவும் சங்கங்கள் அமைத்திட அரசால் உத்தரவிடப்பட்டுள்ளதாகவும், மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் முஸ்லிம் மகளிர் உதவும் சங்கம் மூலம் திரட்டப்படும் நன்கொடைத் தொகைக்கு இணையாக அரசால் வழங்கப்படும் இணை மானியத் தொகையினை 1:2 என்ற விகிதாச்சாரத்தில் உயர்த்தி வழங்கியும் ஏற்கனவே வழங்கப்படும் இணை மானியத் தொகையாக ஆண்டிற்கு ரூ.10 இலட்சம் என்ற உச்சவரம்பை ரூ.20 இலட்சம் என உயர்த்தியும் மேலும், இவ்வுயர்வானது 01.04.2012–க்கு பிறகு வசூலிக்கப்படும் நன்கொடைத் தொகைகளுக்கு மட்டுமே பொருந்தும் என்று ஆணையிடப்பட்டுள்ளதாகவும் மேலும், மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசு கடிதத்தில் இச்சங்கங்களால் வசூல் செய்யப்படும் நன்கொடைத் தொகைக்கு வருடத்தில் இருமுறை அதாவது ஏப்ரல் முதல் செப்டம்பர் வரை மற்றும் அக்டோபர் முதல் மார்ச் வரை என இரண்டு காலங்களுக்கு இணை மானியத்திற்கு விண்ணப்பிக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

2. அதன்படி, கீழே குறிப்பிட்டுள்ள 17 மாவட்டங்களில், மாவட்ட முஸ்லிம் மகளிர் உதவும் சங்கங்களால் வசூல் செய்யப்பட்ட நன்கொடைத் தொகைக்கு அரசின் இணை மானியம் 1:2 என்ற விகிதத்தில் ஒப்பளிக்கக் கோரி சம்மந்தப்பட்ட மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்களிடமிருந்து கருத்துருக்கள் வரப்பெற்றுள்ளதாகவும், எனவே கீழே உள்ள 17 மாவட்டங்களில் முஸ்லிம் மகளிர் உதவும் சங்கங்களால் 2021–2022–ஆம் ஆண்டிண் முதல் பருவத்தில் [01.04.2021 முதல் 30.09.2021 வரை] வசூலிக்கப்பட்ட மொத்த நன்கொடைத் தொகையான ரூ.69,82,006/–க்கு அரசின் இணை மானியத்தினை 1:2 என்ற விகிதாசாரத்தில் உச்சபட்சத் தொகைக்கு (ரூ.20.00 இலட்சம்) உட்பட்டு ரூ.1,39,64,012/–க்கு நிதி ஒப்பளிப்பு செய்து, ஆணை வழங்குமாறு சிறுபான்மையினர் நல இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார். அதன் விவரம் பின்வருமாறு:–

| வ. எண் | மாவட்டம் | 01.04.2021 முதல் 30.9.2021 வரை வசூல் செய்த மொத்த நன்கொடைத் தொகை ரூ. | அரசின் இணை மானியம் கோரி பரிந்துரை செய்யும் தொகை (1:2 என்ற விகிதாச்சாரத்தின் படி) ரூ. |
|---|---|---|---|
| 1. | தேனி | 1000000 | 2000000 |
| 2. | திருவள்ளூர் | 559000 | 1118000 |
| 3. | மதுரை | 60000 | 120000 |
| 4. | கோயம்புத்தூர் | 410000 | 820000 |

| | | | |
|---|---|---|---|
| 5. | திண்டுக்கல் | 90000 | 180000 |
| 6. | தருமபுரி | 285000 | 570000 |
| 7. | வேலூர் | 55000 | 110000 |
| 8. | இராமநாதபுரம் | 200000 | 400000 |
| 9. | சேலம் | 15000 | 30000 |
| 10. | காஞ்சிபுரம் | 818000 | 1636000 |
| 11. | நாமக்கல் | 40000 | 80000 |
| 12. | திருப்பூர் | 1000000 | 2000000 |
| 13. | திருநெல்வேலி | 5000 | 10000 |
| 14. | செங்கல்பட்டு | 1000000 | 2000000 |
| 15. | புதுக்கோட்டை | 485006 | 970012 |
| 16. | நீலகிரி | 300000 | 600000 |
| 17. | கிருஷ்ணகிரி | 660000 | 1320000 |
| | **மொத்தம்** | **6982006** | **13964012** |

3. மேலே, ஐந்தாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், 26 மாவட்ட முஸ்லிம் மகளிர் உதவும் சங்கங்கள் மூலம் 2020–2021–ஆம் ஆண்டின் இரண்டாம் பருவத்தில் [01.11.2020 முதல் 31.03.2021 வரை] வசூலிக்கப்பட்ட மொத்த நன்கொடைத் தொகையான ரூ.1,54,00,448/–க்கு அரசின் இணை மானியத்தினை 1:2 என்ற விகிதாசாரத்தில் உச்சபட்சத் தொகைக்கு (ரூ.20.00 இலட்சம்) உட்பட்டு ரூ.3,08,00,896/–யும் மற்றும் மேலே, மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணையிட்டவாறு, 17 மாவட்ட முஸ்லிம் மகளிர் உதவும் சங்கங்களால் 2020–2021 ஆம் ஆண்டின் முதல் பருவத்தில் [01.04.2020 முதல் 31.10.2020 வரையில்] வசூல் செய்யப்பட்ட நன்கொடைத் தொகைக்கு அரசின் இணை மானியத்தினை 1:2 என்ற விகிதாச்சாரத்தின் அடிப்படையில் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை போக மீதம் ஒப்பளிக்கப்பட வேண்டிய தொகை ரூ.2,10,230/–யும் சேர்த்து மொத்தம் ரூ.3,10,11,126/–ஐ நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிட்டது.

4. சிறுபான்மையினர் நல இயக்குநரின் செயற்குறிப்பினை நன்கு ஆய்வு செய்து, அதனை ஏற்று, மேலே பத்தி 2–இல் குறிப்பிடப்பட்டுள்ள 17 மாவட்ட முஸ்லிம் மகளிர் உதவும் சங்கங்கள் மூலம் 2021–2022–ஆம் ஆண்டின் முதல் பருவத்தில் [01.04.2021 முதல் 30.09.2021 வரை] வசூலிக்கப்பட்ட மொத்த நன்கொடைத் தொகையான ரூ.69,82,006/–க்கு அரசின் இணை மானியத்தினை 1:2 என்ற விகிதாசாரத்தில் உச்சபட்சத் தொகைக்கு (ரூ.20.00 இலட்சம்) உட்பட்டு ரூ.1,01,99,874/–ஐ (ரூபாய் ஒரு கோடியே ஒரு இலட்சத்து தொண்ணூற்று ஒன்பதாயிரத்து எண்ணூற்று எழபத்து நான்கு மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

5. மேலே, பத்தி 4–இல் ஒப்பளிப்பு செய்யப்பட்டத் தொகை கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:–

"2235 – சமூகப் பாதுகாப்பும் நலனும் – 60 ஏனைய சமூகப் பாதுகாப்பு, நலத் திட்டங்கள் – 200 – ஏனைய திட்டப் பணிகள் – மாநிலச் செலவினங்கள் –DF – முஸ்லிம் மகளிர் சங்கங்கள் – 309 – உதவித் தொகை – 01 – நடப்புச் செலவுக்கான உதவித் தொகை".

IFHRMS (த.தொ.கு 2235 60 200 DF 30901)

6. மேலே, பத்தி 4–இல் ஒப்பளிப்பு செய்யப்பட்டத் தொகை 2021–2022–ஆம் நிதியாண்டிற்கான இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகையிலிருந்து மேற்கொள்ளப்பட வேண்டும். மேலே, பத்தி 4–இல் ஒப்பளிப்பு செய்யப்பட்டத் தொகை போக மீதம் ஒப்பளிக்கப்பட வேண்டிய தொகை ரூ.37,64,138/– அடுத்த நிதியாண்டில் (2022–2023) ஒப்பளிப்பு செய்யப்படும். மேலே, பத்தி 4–இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையினைப் பெற்று சம்பந்தப்பட்ட மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்கள் மூலம் மேலே பத்தி 2–இல் குறிப்பிடப்பட்டுள்ள 17 மாவட்ட முஸ்லீம் மகளிர் உதவும் சங்கங்களுக்கு வழங்கவும், முந்தைய பருவத்திற்கு பயனீட்டுச் சான்றிதழ் பெறப்படாத மாவட்ட முஸ்லீம் மகளிர் உதவும் சங்கங்களிடம் பயனீட்டுச் சான்றிதழ்களைப் பெற்று, அவற்றினை சரிபார்த்தபின் மானியத் தொகையினை விடுவிக்கவும் சிறுபான்மையினர் நல இயக்குநருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

7. முஸ்லிம் மகளிர் உதவும் சங்கங்களால் திரட்டப்பட்ட நிதி மற்றும் அரசு மானியம் ஆகியவற்றை மேற்கண்ட சங்கங்கள் இஸ்லாமிய மகளிர் நலத் திட்டங்களுக்குப் பயன்படுத்தியதற்கான பயன்பாட்டுச் சான்றினை சம்பந்தப்பட்ட மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்கள் சிறுபான்மையினர் நலத்துறை இயக்குநருக்கு அளிக்க வேண்டுமென்று அறிவுறுத்தப்படுகிறார்கள்.

8. மேலும், சிறுபான்மையினர் நலத்துறை இயக்குநர் கீழ்க்காணும் நிபந்தனைகளை உறுதி செய்யுமாறு அறிவுறுத்தப்படுகிறார்:–

I. அரசாணை (நிலை) எண்.109, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல (ட்டி1)த் துறை, நாள் 08.10.2012–ல் ஆணையிட்டுள்ளவாறு முஸ்லிம் மகளிர் உதவும் சங்கங்களால் திரட்டப்பட்ட நிதி மற்றும் அரசு மானியம் ஆகியவற்றை மேற்காணும் முஸ்லிம் மகளிர் உதவும் சங்கங்கள் இஸ்லாமிய மகளிர்

நலத் திட்டங்களுக்குப் பயன்படுத்தியதற்கான பயன்பாட்டுச் சான்றுகள் அளிக்கப்பட்டு உள்ளனவா என்பது குறித்து உறுதி செய்யப்பட வேண்டும்;

II. தற்போது கோரப்பட்ட இணை மானியம் இதற்கு முன் அனுப்பிய கருத்துருவில் சேர்க்கப்படவில்லை என்பதை உறுதி செய்யப்பட வேண்டும்;

III. 2012–2013 ஆம் ஆண்டு முதல் அரசின் இணை மானியம் சங்கம் ஒன்றிற்கு ரூ.20.00 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும் என்பதையும், மேலும், ஏற்கனவே ஒப்பளிக்கப்பட்ட மாவட்டங்களுக்கு கொடுக்கப்பட்ட காலங்களுக்குரிய தொகை மீண்டும் வழங்கப்படவில்லை என்பதையும் உறுதி செய்யப்பட வேண்டும்;

IV. முஸ்லிம் மகளிர் உதவும் சங்கங்கள் திரட்டிய நன்கொடைத் தொகை வங்கி கணக்கில் செலுத்தியதற்கான உண்மைத் தன்மையினை சரிபார்த்திட வேண்டும்;

9. இவ்வரசாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண். 13685/நிதி(பி,மிபி(ம)சிந)துறை/2022, நாள் 28.03.2022 –ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**ஆ.கார்த்திக்**
**அரசு முதன்மைச் செயலாளர்**

பெறுநர்:
இயக்குநர்,
சிறுபான்மையினர் நலன், சென்னை–5.
ஆணையர்,
மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன், சென்னை–5.
மாநிலக் கணக்காயர், சென்னை–18.
மாநிலக் கணக்காயர் (தணிக்கை – I / II) – சென்னை–18.
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை–5.
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்,
சென்னை–5.
சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும்
மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்கள்.

நகல்:

மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ்
தமிழர் நலத்துறை அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர்,
சென்னை –9.
நிதி (பி,மிபி(ம)சிந) த் துறை, சென்னை–9.
முதன்மைச் செயலாளர் அவர்களின் முதன்மை
தனிச் செயலர், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர்
மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, சென்னை –9.
இருப்புக் கோப்பு/உபரி நகல்கள்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

30/3/22

பிரிவு அலுவலர்

30/3/22